ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 859/12 - 1995 පෙබරවාරි 23 වැනි බ්‍රහස්පතින්දා - 1995.02.23
859/12 ஆம் இலக்கம் - 1995 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)— பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ- பீ 21/78 III

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

பிரிவு 24 ஆ இன் கீழான கட்டளை

1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 24 ஆ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரண ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்தும், களனிப் பல்கலைக்கழகத்தின் பேரவை, மூதவை மற்றும் கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுள்வேத வித்தியாலயத்தின் பாலக சபை ஆகியவற்றின் ஒருப்பாட்டுடனும் இந்தக் கட்டளை மூலம்:-

(i) ஆயுள்வேத மருத்துவத்தில் உயர்கல்வியை ஏற்பாடு செய்யும், மேம்படுத்தும் அத்துடன் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுள்வேத வித்தியாலயத்தை ஓர் உயர் கல்வி நிறுவகமாக 01 மார்ச் 1995 ஆம் தேதியிலிருந்து ஏற்றங்கீகரிக்கின்றேன்;

(ii) சொல்லப்பட்ட நிறுவகத்தை களனிப் பல்கலைக்கழகத்துடன் ஒன்றிணைக்கிறேன்;

(iii) அத்தகைய நிறுவகத்திற்கு " கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுள்வேத நிறுவகம்" என்ற பெயரையும் மகுடத்தையும் குறித்தொதுக்குகிறேன்.

றிச்சாட் பத்திரண,
கல்வி, உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
1995, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி.

03-178

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.